# வகுப்பு - 10

## இயல் - 1

## கவிதைப்பேழை

## அன்னை மொழியே

### குறுவினா

**1. "மன்னும் சிலம்பே !மணிமே கலைவடிவே !**

**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே " இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள ஐம்பெருங் காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக,**

- சீவக சிந்தாமணி
- வளையாபதி
- குண்டலகேசி

**2. கவிஞர் சச்சிதானந்தனின் தமிழ்ப் பசியை எழுதுக.**

- சாகும்போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும் என்றன்
- சாம்பலும் தமிழ் மணந்து வேகவேண்டும் என்பதே கவிஞர் சச்சிதானந்தனின் தமிழ்ப்பசிஆகும்.

**3. பெருஞ்சித்திரனார் எழுதிய நூல்கள் யாவை?**

உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு , எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப்பறவைகள் முதலியனவாகும்.

**4. கவிஞர் மனதில் தமிழ் மீது பற்றுணர்வு ஏற்படக்காரணமாய் இருந்தவை எவை?**

பிறர் வியக்கத்தக்க நீண்ட நிலைத்தன்மையும், வேற்று மொழியார் உரைத்த புகழுரையும் கவிஞர் மனதில் தமிழ் மீது பற்றுணர்வு ஏற்படக்காரணமாய் இருந்தன,

### சிறுவினா

**1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?**

- அன்னை மொழியானவள் அழகு நிறைந்த செந்தமிழானவள்.
- கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் அரசாண்ட மண்ணுலப் பேரரசாகத் திகழ்பவள்.
- பாண்டிய மன்னனின் மகள்.

- திருக்குறளைப் பெற்ற பெருமைக்குரியவள்.
- பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு போன்ற நூல்களையும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற அழகான காப்பியங்களையும் பெற்ற பெருமைக்குரியவள்,
- பழம்பெருமையும் தனக்கெனத் தனிச்சிறப்பும். இலக்கிய வளம் கொண்டது
- வியக்கத்தக்க நிலைத்தன்மையும், வேற்றுமொழியார் உன்னுடைய தமிழைப் பற்றி உரைத்த புகழுரையும் எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன.
- செந்தாமரையின் தேனைக்குடித்துச் சிறகடித்துப்பாடும் வண்டினைப் போன்று நாங்கள் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்.

**2. தமிழின் தன்மைகளை எழுதுக.**

- சின்னக் குழந்தையின் சிரிப்பும் ஆனவள். பழுத்த நரையின் பட்டறிவும் ஆனவள்
- வானத்திற்கும் வையத்திற்கும் இடைப்பட்டயாவற்றையும் கவிதையாகக் கொண்டவள்.
- உணர்ந்து கற்றால் கல் போன்ற மனத்தையும் கற்கண்டாக்குபவள்,
- அறிவைப் பெருக்குபவள் அன்பை வயப்படுத்துபவள்,

## நெடுவினா

**1. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலையும். பெருஞ்சித்தினாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக,**

**தமிழ்த்தாய் வாழ்த்து**

தமிழ்த்தாயை சுந்தரனார் அவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலில் நீரலைகள் எழுந்து ஆர்ப்பரிக்கின்ற கடலைத்தன் ஆடையாய் உடுத்திக் கொண்டுள்ள நிலமாகிய பெண்ணுக்கு அழகிய முகமாகத் திகழ்வது பாரத கண்டம். அம்முகத்திற்கு அழகிய பிறை போன்ற நெற்றியாகத் திகழ்வது,

தெற்குப்பகுதி அந்நெற்றியில் இட்டுக்கொண்ட குங்குமம் போல புகழ் ஒளி வீசித் திகழ்வது திராவிட நாடு. அக்குங்குமத்தின் வாசனையைப் போல் அனைத்துப்பகுதி மக்களும் இன்பம் அடையும்படி எட்டுத்திசைகளிலும் பரவி வாழ்கின்ற தமிழ் என்னும் தெய்வம் உன் பெருவாழ்வு புதுமைக்குப் புதுமையாய் இன்றும் இளமையாய்

விளங்குகிறது,தமிழ்த்தாயே உன் பேராற்றலை வியந்து செய்வதறியாது மெய்மறந்து வாழ்த்துகின்றோம்.

**பெருஞ்சித்தினாரின் தமிழ் வாழ்த்து**

அழகு நிறைந்த செந்தமிழே அன்னை மொழியே! பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே! கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே பாண்டிய மன்னனின் மகளே திருக்குறளின் பெருமைக்குரியவளே! பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே, பதினெண்கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! பொங்கியெழும் நினைவுகளால் உன்னைத் தலை பணிந்து வாழ்த்துகின்றோம் என பெருஞ்சித்தினாரின் தமிழ்த்தாயை! வாழ்த்துகின்றார்.

**ஒப்பீடு**

மனோன்மணீயம் சுந்தரனார் அவர்கள் நிலம் என்னும் பெண்ணின் முகமாகத் திகழும் பாரத கண்டத்தில் அழகிய நெற்றியாகத் திகழ்வது தென்தமிழ்நாடு என்றும் அதில் குங்குமம் போல் திகழ்வது திராவிட நாடு என்கிறார். பழமையான மொழியாய் இருந்தாலும் புதுமைக்குப் புதுமையாய் இளமையாய்த் தன்னை நிலைநிறுத்தி எட்டுத் திசைகளிலும் பரப்பி வாழ்கிறது தமிழ் எனத் தமிழை வாழ்த்துகிறார்.

பெருஞ்சித்திரனார் அவர்கள் பழமையான மொழியாக குமரிக்கண்டத்தில் தோன்றி பாண்டிய மன்னனின் மகளாய் அரசாண்ட பெருமைக்குரியவள் என்றும் காப்பியங்களின் வடிவமாய் திகழும் தமிழ்த்தாயே உன்னைத் தலை பணிந்து வாழ்த்துகிறோம் என்றும் திராவிட நாட்டில் பிறந்து வளர்ந்த தமிழ் அன்னையைப் போற்றிப் பாடுகின்றார்.

**செய்யுளடி வினாவிற்கு விடையளி**

1. ***அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!***
   ***முன்னைக்கும் முன்னை முகிழ்ந்த நறுங்கனியே!***
   ***கன்னிக் குமரிக் கடல் கொண்ட நாட்டிடையில்***
   ***மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!***

**வினாக்கள் :**

1. பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் ________________.

**அ. துரைமாணிக்கம்** ஆ. கபிலர்

இ. பரணர் ஈ. பாவலரேறு

2. பெருஞ்சித்திரனாரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை தமிழுக்கு ______________ அமைந்தது.

அ. வழிகாட்டியாய் **ஆ. கருவூலமாய்**

இ. உரையாய் ஈ. பதிப்பாய்

3. பெருஞ்சித்திரனாரின் தென்மொழி ______________ இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வைப் பரப்பியவர்.

அ. குடும்பவிளக்கு ஆ. தமிழ்ஆயிரம்

இ. தமிழ்மரபு **ஈ. தமிழ்ச்சிட்டு**

4. தேனைக் குடித்துச் சிறகடித்துப் பாடுவது ______________.

**அ. வண்டு** ஆ. காகம் இ. மைனா ஈ. பட்டாம்பூச்சி

5. தமிழ் மன்னனின் மகள் என்று கவிஞர் கூறுகிறார்.

**அ. பாண்டிய** ஆ. சேரனின் இ. நாயக்கரின் ஈ. சோழனின்

6. ’சாகும்போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும் என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேகவேண்டும்‘ என்ற வரிகளுக்குச் சொந்தக்காரர்

அ. பாரதி ஆ. பாரதியார் **இ. சச்சிதானந்தன்** ஈ. கம்பன்

**செய்யுளடி வினாவிற்கு விடையளி**

2. **தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!**
**இன்னறும் பாப்பத்தே எண் தொகையை!**
**நற்கணக்கே! மன்னுஞ்சிலம்பே!**
**மணிமே கலைவடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!**

**வினாக்கள் :**

1. இப்பாடலின் ஆசிரியர்

**அ. பாவலரேறு பெருஞ்சித்தினார்** ஆ. கம்பன்

இ. சோழன் ஈ. பாண்டியன்

2. இப்பாடலில் கூறும் நூல்களில் ஒன்று

அ. சீவக சிந்தாமணி ஆ. அகநானூறு

இ.கலித்தொகை **ஈ. சிலப்பதிகாரம்**

3. இப்பாடலில் இடம் பெற்ற தொகுதி

அ. பதிற்றுப்பத்து ஆ. குறுந்தொகை

**இ. கனிச்சாறு** ஈ. எட்டுத்தொகை

4. இப்பாடலுக்கு ஏற்ற தலைப்பு

**அ. தமிழ்ச்சுவை** ஆ. கவிதைசுவை இ. அன்பின் சுவை ஈ. மணிமேகலை


Created by Pinkz